# சுசூக்கி மாருதி வாகனங்களின் எண்ணிக்கை 10 மில்லியனைத் தாண்டியுள்ளது

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பத்து இலட்சமாவது சுசூக்கி மாருதி வாகனம் தொழிற்சாலையிலிருந்து சந்தைக்கு அனுப்பப்பட்டுள்ளதை இந்தியாவின் மிகப் பெரிய கார் உற்பத்தி நிறுவனமான மாருதி சுசூக்கி இந்தியா லிமிட்டட் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. இல. 243899 என்ற அடிச்சட்டத்தைக் கொண்ட மெட்டலிக் பிறீஸ் புளு வெகன் ஆர் VXi வாகனம் 2011 மார்ச் 15ஆம் திகதி நிறுவனத்தின் குர்கோன் தொழிற்சாலையில் இருந்து வெளியேறியபோதே இந்த வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டது.

இந்தச் சாதனையின் மூலம், உலகில் பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட வாகனங்களை உற்பத்தி செய்த ஒருசில நிறுவனங்களின் மதிப்பார்ந்த பட்டியலில் சுசூக்கி மாருதி இடம்பிடித்துள்ளது. இந்தியாவில் ஆகக் கூடுதலாக விற்பனை செய்யப்படும் வாகனங்கள் என்ற பெருமையும் சுசூக்கி மாருதியைச் சாரும்.

இச் சாதனை பற்றி மாருதி சுசூக்கி இந்தியா லிமிட்டட்டின் முகாமைப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. ஷின்ஸோ நாக்கனிஷி கருத்து வெளியிடுகையில், வாடிக்கையாளர்களினதும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினரதும் முக்கிய பங்களிப்பைப் பற்றி விசேடமாகக் குறிப்பிட்டார். நிறுவனத்திற்கு உறுதியான அடித்தளத்தை இட்ட ஸ்தாபகப் பங்காளிகள் முதல் ஊழியர்கள், வியாபாரப் பங்காளிகள், வாடிக்கையாளர்கள் முதலிய சகல தரப்பினருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

மாருதி சுசூக்கி இந்தியா லிமிட்டட், இந்திய அரசாங்கத்திற்கும் ஜப்பானின் சுசூக்கி மோட்டோர் கோப்பரேஷனுக்கும் இடையிலான ஒரு கூட்டு முயற்சியாக 1983ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அது “மாருதி உடியொக்” என்று அழைக்கப்பட்டது. 23 ஆண்டுகால செயற்பாடுகளின் பின், இந்த நிறுவனம் 5 மில்லியன் வாகனங்கள் என்ற இலக்கைத் தாண்டியது. சமீப காலத்தில் எரிபொருள் சிக்கனமான சிறிய வாகனங்களுக்கான கிராக்கி பன்மடங்கு அதிகரித்ததன் விளைவாக, அடுத்த 5 மில்லியன் வாகனங்களுக்கு 6 வருடங்களுக்குச் சற்று அதிகமான காலமே எடுத்தது. தொழிற்சாலைகளின் திறனாற்றல் விரிவாக்கம், வினைத்திறன் மட்டத்தின் உயர்ச்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் என்பவற்றின் உதவியினால் நிறுவனம் இக் குறுகிய காலத்திற்குள் துரித வளர்ச்சியைப் பெற்றது.

இலங்கையிலும் சுசூக்கி மாருதி வாகனங்கள் அமோக வரவேற்பைப் பெற்று விற்பனையில் முன்னணி வகிக்கின்றது. இலங்கையில் ஆகக் கூடுதலாக விற்பனை செய்யப்படும் புத்தம்புதிய கார்கள் என்ற முதன்மை நிலையை அடுத்தடுத்து எட்டு வருடங்களாக சுசூக்கி மாருதி வகித்து வருகின்றது.

புதிய வடிவமைப்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட A-Star, Ritz, WagonR போன்ற உலகளாவிய உபாய மொடல்கள் சகல சந்தைகளிலும் வாடிக்கையாளர்களின் அபிமானத்தைச் சம்பாதித்தன. கடந்த சில வருடங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன மாற்றங்களினால் உலகெங்கும் சுசூக்கி மாருதி வர்த்தகப் பெயருக்குப் புதிய உந்துசக்தி கிடைத்துள்ளது.

K - தொடர் பெற்றோல் எஞ்ஜின்கள் பொருத்தப்பட்ட புதிய மொடல்கள் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டமை சுசூக்கி மாருதி வாகன வரிசையின் தொழில்நுட்பச் சிறப்பை மேலும் வலுப்படுத்த உதவியுள்ளது. சிக்கனமான இச் சிறிய வாகனங்கள் புதிய தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்டிருப்பதால் வாடிக்கையாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. சுசூக்கி மாருதி தற்போது பயணிகளுக்கான 16 வாகன மொடல்களை இந்தியாவில் வழங்குகின்றது. இந்தியாவின் பயண வாகனங்கள் சந்தையில் அது 45 சதவீதத்தை வகிக்கிறது. கம்பனியினால் இப்போது வழங்கப்படும் வாகன வகைகளுள் M800, உலகில் ஆகக் கூடுதலாக விற்பனையாகும் Alto, Alto K10, எஸ்ரிலோ, வெகன்ஆர், ரிட்ஸ், A ஸ்டார், ஸ்விவ்ட், MPV ஓம்னி மற்றும் Eeco, SUV ஜிப்ஸி என்பன உள்ளடங்கும்.

அடுத்த ஆண்டில் உற்பத்தி இலக்குகள் மேலும் அதிகரிக்குமெனவும் மொத்த வருடாந்த உற்பத்தி 1.2 மில்லியனாக இருக்குமெனவும் மாருதி சுசூக்கி இந்தியா லிமிட்டட் எதிர்பார்க்கிறது.

.............................